**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 521/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | நல்லுத்தேவர் | தொழில் | : | தொடர்பு அலுவலர் (ஓய்வு) |
| கிராமம் | : | ராஜபாளையம் | வயது | : | 70 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 11.03.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லூரியில் தொடர்பு அலுவலராக வேலை செய்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். 2015 ம் வருடம் ஏ.கே.டி.டி.ஆர் கல்லூரியில் தொடர்பு அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 13.02.2015 அன்று எங்கள் கல்லூரிக்கு சொந்தமான பேருந்தை பிச்சை என்பவர் இராஜபாளையத்திலிருந்து சங்கரன்கோவில் நோக்கி மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்துள்ளார். மணிராஜ், மாரி ஆகியோர்கள் வண்டியில் கல்லைக் கொண்டு எறிந்ததினால் வண்டி விபத்துக்குள்ளாகி டிரைவருக்கும், மாலா என்ற உடற்கல்வி இயக்குநருக்கும், வேறு 2, 3 மாணவிகளுக்கு கொடுங்காயங்களும், வேறு சுமார் 10 நபர்களுக்கு மேல் சாதாரண காயங்களும் ஏற்பட்டதாக காவல்நிலையத்திலிருந்து தகவல் வந்தது. பின்னர் நான் சம்பவயிடமான வாடிக்கோட்டை விலக்கு பக்கம் வந்தேன்.

அப்போது இரவு 08.00 மணியிருக்கும். ஏற்கனவே சம்பவம் மாலை சுமார் 06.45 மணிக்கு நடந்ததாக கேள்விபட்டேன். காயம் அடைந்தவர்கள் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள். கடுமையாக பாதிப்படைந்த டிரைவர் பிச்சையை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். ஆசிரியர் மாலாவை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து இராஜபாளையம் கிருஷ்ணா மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்னர் மறுநாள் 14.02.2015 ம் தேதி காலை 09.00 மணியளவில் சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.1 ஆகும். தற்போது டிரைவர் பிச்சை இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சம்பவயிடத்திற்கு செல்வதற்கு இரவு 08.00 மணியிருக்கும் என்றால் சரிதான். எதிரிகளை நான் ஏற்கனவே பார்த்ததில்லை. போலீசார் எனக்கு எதிரிகளை காண்பிக்கவில்லை. போலீசார் சொன்னதற்கிணங்க நான் பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.13 14:01:14 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 521/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாலா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சங்கரபாண்டியன் | தொழில் | : | உடற்கல்வி ஆசிரியர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 45 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 11.03.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் ராஜபாளையத்தில் உள்ள ஏ.கே.டி.டி.ஆர் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 ராஜா எங்களது கல்லூரியின் தொடர்பு அலுவலர். எதிரிகளை எனக்கு தெரியும். 13.02.2015 ம் தேதி, மாலை நான் பள்ளி வேலையை முடித்து விட்டு ஏ.கே.டி.டி.ஆர் கல்லூரி வாகனத்தில் சங்கரன்கோவிலுக்கு வந்து கொண்டிருந்தோம். மொத்தம் 25 மாணவிகள் ராஜபாளையத்திலிருந்து கிளம்பினோம். அதில் வரும் வழியில் ஆங்காங்கே மாணவிகள் அவர்களது ஊரில் இறங்கி விட்டார்கள். சங்கரன்கோவிலுக்கு அருகில் பெரும்புத்தூரை தாண்டி வாடிக்கோட்டை விலக்கு பக்கம் வரும்போது 13 மாணவிகளும், நானும் கல்லூரி பேருந்திற்குள் இருந்தோம்.

அப்போது எதிரிகள் இருவரும் வேகமாக இருசக்கரவாகனத்தில் வந்தார்கள். நான் என்னுடைய ஸ்டாப்பில் இறங்குவதற்காக எனது பேக்கை

எடுத்துக்கொண்டு எழுந்து நின்று கொண்டிருந்தேன். அப்போது வாடிக்கோட்டை விலக்கில் வரும்போது, மாலை 06.30 மணியிருக்கும். அந்த இடத்தில் வைத்து ஆஜர் எதிரிகள் ஒரு பெரிய கல்லை எடுத்து டிரைவர் பிச்சை மீது எறிந்தார்கள். அந்த கல் டிரைவர் பிச்சையின் நெற்றியில் பட்டு இரத்தம் வந்தது. பஸ்ஸின் முன்பக்கத்தில் கல் மோதி கண்ணாடி உடைந்து தான் டிரைவர் பிச்சை மீது கல் பட்டது. அவர் நிலைகுலைந்து ஸ்டியரிங்கிலிருந்து கையை எடுத்து சரிந்து பக்கவாட்டில் வண்டின் உள்பக்கமாக விழுந்து விட்டார்.

டிரைவர் இல்லாமல் வண்டி தடுமாறி ஓடிக்கொண்டிருக்கும் போது பிள்ளைகள் கதறினார்கள். வண்டி ரோட்டை விட்டு விலகி 200 மீட்டர் தாண்டி பாழடைந்த வீட்டில் மோதி நின்றது. பஸ்ஸின் முன்பக்கம் முழுவதும் உடைந்து சேதமானது. எனக்கு முகத்தில் அடிப்பட்டு மேல்தாடை எலும்பு உடைந்து, கீழ்தாடையில் உள்ள 4 பற்களும், மேல்தாடையில் உள்ள ஒரு பல்லும் உடைந்தது.

2, 3 கல்லூரி மாணவிகளுக்கு காது, மூக்கு, விரல்களில் பலத்த அடிபட்டது. வேறு பிள்ளைகளுக்கு சிறு, சிறு காயங்கள் ஏற்பட்டது. நான் உடனடியாக செல்போன் மூலம் கல்லூரி நிர்வாகத்திற்கு தகவல் சொன்னேன். அக்கம் பக்கத்தில் உள்ள பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் அந்த இடத்திற்கு வந்தார்கள். அவர்கள் ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்து எங்களை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அடிப்பட்ட மாணவிகளின் பெற்றோர்களும் வந்தார்கள். எனக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்த பின்னர் மேல்சிகிச்சைக்காக கல்லூரி

நிர்வாகத்திலிருந்து இராஜபாளையம் கிருஷ்ணா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். அங்கு 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். டிரைவர் பிச்சை மேல்சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கேள்விபட்டேன். பின்னர் ஒரு மாதத்தில் அவர் இறந்ததாக கேள்விபட்டேன்.

எங்கள் கல்லூரியில் படித்த கோமதி என்ற மாணவியும் சம்பவநாள் அந்த பஸ்சில் வந்தார். அவர் பெரும்பத்தூரில் இறங்கி விட்டார். எதிரிகளில் ஒரு நபர் கோமதியுடன் பழகி வந்ததாகவும், கோமதியின் அப்பா கோமதியை கல்லூரி பேருந்து இருப்பதினால் அதில் ஏற்றி விடுகிறார் எனவும், இல்லையென்றால் கோமதி வேறு பஸ்சில் பயணம் செய்தால் அவரிடம் பேசும் வாய்ப்பு கிடைக்கும் என்பதனால் கோபத்தில் எதிரிகள் பஸ்சில் கல் விட்டு எறிந்ததாக கல்லூரி மாணவிகள் சொன்னார்கள். இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.13 14:01:22 +0530